# CFJ VBS SONGS - 2026

## ஜெபப்பாடல்

### பாடல் – 1



என் சின்ன கண்கள் மூடி
சின்ன கைகள் கூப்பி } 2
உம்மைத் தேடி வந்தேனே

பாவியான என்னை - ஏற்றுக் கொண்ட இயேசு } 2
ஒன்றுமில்லா என்னை - தேற்ற வந்த இயேசு
உம்மை நான் நோக்கி - கூப்பிடும் போது
பெரிய காரியம் செய்திடுவீர் -ஆமென் (3)

## கருத்துப்பாடல்

### பாடல் – 2

Hello.... Hello.... Hello..... (3) Call to me -2
Call to me
Jesus சொன்னாங்க
Call to me

*பாவம் செய்த நீ - Call to me
உண்மையாய் வாழ்ந்திட - Call to me - Hello

*விசுவாசம் வைத்து நீ - Call to me
ஆபத்து நேரத்திலும் - Call to me - Hello

*தினம் தோறும் கூப்பிடு - கூப்பிடு.... கூப்பிடு
முடிவுவரை நிலைத்திரு - நிலைத்திரு. நிலைத்திரு.
- Hello

### பாடல் - 3




ஒரே வழி (2) இயேசுவே நம் வழி
பரலோகம் செல்லும் வழி
இயேசுவே நம் வழி -2
ரபபபப்பா ஹே ரபபபப்பா ஹே
ரபபபப்பா ஹே ஹே ரபபப்பா
சாத்தானின் வழி அது wrong way wrong way
நீ மாட்டிக்குவ U.... Getaway Getaway
- ஒரே வழி
பாவம் நீக்கிட இயேசு தான் ஒரே வழி
உன் ஜெபத்தை கேட்டிட இயேசு தான் ஒரே வழி
பரிசுத்தம் தந்திட
உன் வாழ்வை உயர்த்திட
இயேசு தான் ஒரே வழி
ஒரே வழி ஒரே வழி ஒரே வழி
இயேசுவே ஒரே வழி - 2
இயேசுவே ஒரே வழி

### பாடல் 4



பீப் பீப் பீப் பீப்
பாம் பாம் பாம் பாம் 2
நில் ! கவனி ! செல் ! } 2
சிகப்பு மஞ்சள் – பச்சை - பீப்
பாவம் செய்யாமல் நிற்கணும்
வேத வார்த்தைகளை கவனிக்கணும்
இயேசுவின் பின்னாலே செல்லணும் - ஆமா - 2
- நில்

தடைகள் வந்தாலும் ஜெபிக்கணும்
தோல்வியை விட்டு நீ எழும்பணும்
இயேசுவின் துணையோடு ஜெயிக்கணும் - ஆமா 2
- நில்

### பாடல் 5

No... No...No... No...No...No...No...No...No...No... 2
இல்ல... இல்ல... செய்தி சொல்ல Whats App இல்ல
செய்தி கேட்டு இயேசு வந்தார் மெல்ல மெல்ல
மார்த்தாள் வந்தாள் - பின்னர்
மரியாள் வந்தாள்
இயேசு கண்ணீர் விட்டார்



கல்லை புரட்டச் சொன்னார்
பிதாவிடம் ஜெபித்து நின்றார்
லாசருவே வெளியே வா என்றார்

லாசரு வந்தான் உயிரோடு
ஆட்டம் பாட்டம் ஆரவாரம் கொண்டாட்டம்
உண்மையாய் ஜெபித்ததால் சந்தோஷம்
Na... Na...Na... Na...Na... Na...
Na... Na...Na... Na...Na... Na...



### பாடல் 6

பறவை ஒன்று பறந்தது வானத்தில
வட்டமிட்டு அமர்ந்தது மரத்தில
அதின் விசுவாசம் இறக்கையின் மேலே - (2)
- டும்பா
தம்பி தங்கை வாழ்க்கையில் நீ உயர்ந்திட
வேதம் காட்டும் வழியில் நீ நடந்திடு
உன்/நம் விசுவாசம் இயேசுவின் மேலே - (2)
- டும்பா

### பாடல் 7

தாவீதின் குமாரனே.... எனக்கு இரங்குமே....
என்றான் குருடன் - பர்த்திமேயு குருடன்
1. அதட்டினர் ! விரட்டினர் ! } 2
இன்னும் அதிகமாய் கூப்பிட்டான்
- தாவீதின்

2. நின்றார் ! அழைத்தார் !
என்ன வேண்டுமென்று கேட்டார் } 2
தாவீதின் குமாரனே....
பார்வையடைய வேண்டுமே...
என்றான் குருடன் - பர்திமேயு குருடன்
- லாலாலா

3. விசுவாசித்தான் ! பார்வையடைந்தான் !
இயேசுவின் பின் சென்றான். } 2
- லாலாலா

### பாடல் 8



ஏங்க.... ஏங்க...
ஏங்க ஏங்க நீங்க இங்க வாங்க
ஆலயம் வாங்க வாங்க
கவலையை மறக்க வாங்க
சந்தோஷமாக திரும்பி போங்க - ஏங்க

கூட்டமாய் வாங்க வாங்க
புது பாட்டு பாட வாங்க
இயேசுவைப் பற்றி சொல்லப் போங்க - ஏங்க

### பாடல் 9

அரணான கோட்டையில 4 அடுக்கு பாதுகாப்பில்
பேதுரு மாமாவை சிறை வச்சாங்க } 2
சபை மக்கள் ஒன்று கூடி
ஜெபிக்கவே.... ஜெபிக்கவே
தூதன் அங்கு வந்து
திறக்கவே.... திறக்கவே - தானனானா

சங்கிலியால் கட்டப்பட்டு 2 பேரு நடுவில் இருந்த
பேதுரு மாமா வெளியே வந்தாங்க } 2
தம்பி, தங்கை ஒன்று கூடி
ஜெபித்தாலே... ஜெபித்தாலே
ஆபத்து உன்னை விட்டு
விலகிடும் விலகிடும் - தானனானா
Ha.... Ha....Ha.... Ha....Ha.... Ha....Ha.... Ha....

### பாடல் 10



டும் க்கு சிக்கா டும் க்கு சிக்கா
டும் க்கு சிக்கி சா - 4

முயலும் ஆமைக்கும் வேற வேற
ஓட்டப்பந்தயம் 123 Go............

ஜெயித்தது யாரு யாரு யாரு
விடையை தம்பி/தங்கை சொல்லு -2
நம்ம ஆமைதான் - டும் க்கு

வாழ்க்கை என்பது ஹே ஹே
ஓட்டப்பந்தயம் 123 Go............

ஓடிடு இயேசுவோடு ஓடிடு
பெற்றிடு ஜீவகிரீடம் பெற்றிடு -டும் க்கு

### ஆசிரியர் பாடல்

பதில் இல்லாமல் ஏங்குகிறேன்
என்ன நடக்கும் என்று பதறுகிறேன்
பாவத்தினால் மனம் உடைந்து
வெறுமையினால் தவிக்கிறேன்

1.என்னை மீட்க யார் உண்டு?
எனக்கு பதில் தர யார் உண்டு?
"கவலைப்படாதே மகளே
கவலைப்படாதே மகனே"
என்று குரல் கொடுத்தார் ஆண்டவர்!

"என்னை நோக்கிக் கூப்பிடு
உத்தரவு தருவேன்" என்றார்
"நீ அறியாத அந்த பெரிய
அதிசயங்களை செய்வேன்"

2.காலியாகிவிட்ட வாழ்க்கை
வெறுமையாகிவிட்ட நிலை
மகிழ்ச்சி காணாமல் போயினாலும்
இதோ, கதறாதே! இயேசுவை கூப்பிடு
காலி வாழ்வை நிரப்பி
களிப்பும் மகிழ்ச்சியும் தருவார் - என்னை

3.எந்த சூழ்நிலையிலும்
எந்த இக்கட்டான நாளிலும்
இயேசுவை கூப்பிடு
அவரால் செய்யமுடியாத
அதிசயம் ஒன்றுமில்லை! - என்னை

---

CHILDREN FOR JESUS
CONTACT US
FOLLOW US